# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## கடை, அலுவலக ஊழியர் (ஊழியத்தையும் வேதனத்தையும் ஒழுங்குபடுத்தல்) (திருத்தம்)

***(129 ஆம் அத்தியாயமான) கடை, அலுவலக ஊழியர் (ஊழியத்தையும் வேதனத்தையும் ஒழுங்குபடுத்தல்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

---

*தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர் அவர்களால்*
*2018, மே மாதம் 11 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது*

*(2018, ஏப்பிறல் மாதம் 18 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

***[ 247 ஆம் சட்டமூலம் ]***


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**சட்டப்பயன்பற்றிய கூற்று**

**வாசகம் 2 :** இவ்வாசகம், (129 ஆம் அத்தியாயமான) கடை, அலுவலக ஊழியர் (ஊழியத்தையும் வேதனத்தையும் ஒழுங்குபடுத்தல்) சட்டத்தின் 18ஆ என்னும் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது பெண் வேலையாளர் ஒருவருக்கு உயிருள்ள குழந்தை ஒன்றைப் பிரசவிப்பதற்கு எழுபது நாட்கள் லீவுக்கும் இறந்த பிள்ளை ஒன்றைப் பிரசவிப்ப தற்கு இருபத்தியெட்டு நாட்கள் லீவுக்கும் உரித்துடைமைக்கு ஏற்பாடு செய்கின்றது.

## கடை, அலுவலக ஊழியர் (ஊழியத்தையும் வேதனத்தையும் ஒழுங்குபடுத்தல்) (திருத்தம்)

ச.வ. - ஓ. 29/2009

### (129 ஆம் அத்தியாயமான) கடை, அலுவலக ஊழியர் (ஊழியத்தையும் வேதனத்தையும் ஒழுங்குபடுத்தல்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்

**1.** இச்சட்டம், 2018 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, கடை, அலுவலக ஊழியர் (ஊழியத்தையும் வேதனத்தையும் ஒழுங்குபடுத்தல்) (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

அத்தியாயம் 129 இன் 18ஆ என்னும் பிரிவினைத் திருத்துதல்.

**2.** (129 ஆம் அத்தியாயமான) கடை, அலுவலக ஊழியர் (ஊழியத்தையும் வேதனத்தையும் ஒழுங்குபடுத்தல்) சட்டத்தின் 18ஆ என்னும் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவினை இடுவதன் மூலமும் :-

"(2) இப்பாகமானது ஏற்புடையதாகும் ஒரு பெண் ஊழியர், அவர் மகப்பேற்று நிலை எய்தியிருந்தால் -

(அ) அவருக்கு மகப்பேற்றின் விளைவாக உயிருள்ள குழந்தை ஒன்று கிடைக்குமானால் அவரது மகப்பேற்று தேதியன்று தொடங்கி எழுபது நாட்களுக்கு ; அத்துடன்

(ஆ) மகப்பேற்றில் உயிருள்ள குழந்தை, கிடைக்கவில்லையாயின் அவரது மகப்பேற்று தேதியன்று தொடங்கி இருபத்தியெட்டு நாட்களுக்கு,

எனும் காலப்பகுதிக்கு லீவு பெறுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும் என்பதுடன் தொழில்தருநர் அத்தகைய லீவை அனுமதித்தலும் வேண்டும்.";

(2) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவினை நீக்குவதன் மூலமும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**3.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்.